1971 ஜூன் 30]

மணிமுக்தா நதியின் குறுக்கே அணை

*92. வினா.—**திரு. ந. நாச்சியப்பன்** : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரத்திற்கு மேற்கே மணி நதியில் ஒரு நீர்த் தேக்கம் கட்டுவதற்கு தீவிர நடவடிக்கை எடுக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) தற்போது ஒன்றும் இல்லை.

(இ) இக்கேள்வி எழாது.

திரு. ந. நாச்சியப்பன் : தலைவர் அவர்களே, வெள்ளையர்கள் ஆண்ட காலத்தில் 1920-இல் ஆய்வு செய்யப்பட்டு, அது இதுவரையில் நடைமுறையில் எடுத்துக்கொள்ளப்படாமல் விடப்பட்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய ஆட்சிக் காலத்தில் விரைவாக அணையைக் கட்ட முயற்சி எடுத்துக்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பாலப்பட்டு கிராமத்திற்கு அருகே மணி நதியின் குறுக்கே ஒரு அணை கட்டி கொசப்பாடி ஏரிக்குப் பாசன வசதியளிக்க ரூ. 4.4 லட்சத்திற்கு ஒரு திட்டம் இருந்தது. மேற்குறிப்பிட்ட அணைக்கட்டுத் தலத்திற்குக் கீழே மணிமுக்தா நதித் திட்டம் திட்டமிடப்பட்டிருந்ததால் மணிமுக்தா நதித் திட்டத்திற்கு மேல் தண்ணீர் வரவைத் தடுக்கும் எந்தத் திட்டமும் செயல்படுத்துவது விரும்பத் தக்கதல்ல எனக் கருதி இத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. தற்போது, மணிமுக்தா நதித் திட்டம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதன் செயல்முறையைச் சில ஆண்டுகள் கவனித்தபிறகு, அத்திட்டத்தின் தேவைக்குமேல் உபரி நீர் இருப்பின், மேற்கண்ட மணி நதி திட்டம் குறித்து மறு பரிசீலனை செய்யப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, பொதுவாக, தமிழ் நாட்டில் தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. அதற்குக் காரணம், தமிழ்நாட்டு எல்லையைப் பிரிக்கும் நோக்கில், எந்த முறைப்படி பிரிக்கவேண்டுமோ அந்த முறைப்படி பிரிக்காத காரணத்தால் தான், தமிழ்நாட்டுக்குச் சேரவேண்டிய தண்ணீர் பல ஆறுகளின் மூலம் சேரவில்லை என்பது உண்மையா? எப்போதுமே ஆறுகளையும் மலைகளையும் எல்லையாக வைத்துப் பிரிப்பதுதான் முறை. ஆனால், கேரள எல்லையைப் பொறுத்த வரை, அப்படிப் பிரிக்கப்படாமல் இருக்கிறது. இதைத் தனியாக மறு பரிசீலனை செய்து, மத்திய அரசோடு தொடர்பு கொண்டு தமிழ் நாட்டுக்கு வேண்டிய நீர் வசதியைப் பெற்றுத்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து என்று நான் நினைக்கிறேன். எல்லைப் பற்றிய பிரச்னைக்கு இப்போது இடம் இல்லை. மூலக் கேள்வி ஒரு அணைக்கட்டு கட்டுவதைப் பற்றிய திட்டமாகும். அப்படி ஒரு கருத்து இருந்து வருகிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, பாண்டியார்–புன்னம் புழா திட்டம் நிறைவேற்றப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மூலக்கேள்விக்கு தொடர்பு இல்லை. பாண்டியார்–புன்னம்புழா அணை கட்டுவதைப் பற்றி இப்போது சொல்வது பொருத்தம் இல்லை என்று நினைக் கிறேன்.

Dam across South Pennar

* 93 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct an anicut in South Pennar near Kelavarapalli in Hosur Taluk; and

(*b*) if so, the estimated cost for the same and when it will be completed ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம், ஹோசூர் தாலுகாவில், சின்ன செந்திராம், கேலிவரபள்ளி கிராமங் களின் இடையே பொன்னியாற்றின் குறுக்கே, ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்கான திட்டம் பரிசிலனையில் உள்ளது.

(இ) இத்திட்டத்தின் உத்தேச மதிப்பீடு ரூ. 1,61,50,000 ஆகும். இந்தத் திட்டம் இப்பொழுது ஆரம்ப காலப் பரிசீலனையில் தான் உள்ளது. ஆகையால் திட்டத்தை முழுவதும் பரிசீலித்த பிறகுதான் இத்திட்டத்தைச் செயலாக்குவதுபற்றி எடுத்துக் கொள்ளமுடியும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : With regard to Kelvaarpalli dam, the investigation engineers have made full investigation and recommended construction of dam there. May I know whether the Government will taken up the question of sanction for a dam at an early date?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The scheme is under detailed examination. It will be possible to report whether this scheme is possible of being taken up for execution only after detailed examination is made.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, பாலாற்றில் மழைக் காலத்தில் வருகிற நீர் எல்லாம் கடலில் கலந்து வீணாகி விடுகிறது. வேலூர் அருகே ஒரு அணை கட்டி, அதை விவசாயத்திற்கு பயன் படுத்தும் திட்டத்திற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.